IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

**OS. No**.72/2017 **Date**: 05.11.2024

**PW**1-ராஜேஸ்வரி

சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

என் அப்பாவின் சகோதரிகள் தாவா சொத்தை பொருத்தும் பூர்வீக சொத்தை பொருத்தும் விடுதலை பத்திரம் எதுவும் எழுதி கொடுக்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தாவா சொத்துக்கள் இருப்பாளி மற்றும் செட்டிமாங்குறிச்சி கிராமங்களில் உள்ளது. தாவா சொத்துக்களின் ச.எண்கள் எனக்கு தெரியாது. ச.எண்.218/5A மட்டும் தெரியும். தாவா சொத்தின் விஸ்தீரணம் தெரியாது. அவற்றின் ஜக்குபந்தி விவரம் தெரியாது. அ அட்டவணை 14வது இண சொத்தின் மற்ற இரண்டு பாகஸ்தர்கள் யார் என்று எனக்கு தெரியாது. 15வது இண சொத்தில் உள்ள கிணற்றில் மற்ற 2 பாகஸ்தர்கள் யார் என்று எனக்கு தெரியாது. என் அப்பாவுடன் பிறந்த சகோதரர் பெருமாளுக்கும் அவருடைய மகன்களுக்கும் தான் அந்த சொத்து பாத்தியம் என்றாலும் அவர்களை இந்த வழக்கில் அவசிய தரப்பினர்கள் என்றாலும் சரியல்ல. எனக்கு 1981ல் சேலம் 4 ரோட்டில் உள்ள மீனாட்சி திருமண மண்டபத்தில் திருமணம் ஆனது என்றால் எனக்கு மண்டபத்தின் பெயர் தெரியாது. திருமண அழைப்பிதழ் தற்போது எங்களிடம் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் திருமண அழைப்பிதழ் என் திருமண அழைப்பிதழ் என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.1. திருமண செலவுகளை என் அப்பா தான் செய்தார் என்றால் பாதி செலவு செய்தார். திருமணத்தின் போது எனக்கு என் பெற்றோர் 50 பவுன் நகையும் ரூ.10,000/- பெட்டி பணமும் சீர்வரிசையாக கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. அதேபோல் வீட்டு உபயோக பொருட்கள் அனைத்தும் சீர்வரிசையாக கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. என் பாக நிலத்தின் மதிப்பிற்கு மேல் எனக்கு சீர்வரிசை செய்து விட்டதால் தாவா சொத்தில் எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. திருமணம் முதல் நான் என் கணவருடன் தேவூரில் தான் வசிக்கிறேன் என்றால் சரிதான். தேவூரில் இருந்து தாவா சொத்து சுமார் 30 கி.மீ தொலைவில் உள்ளது என்றால் சரிதான். என் அப்பா

09.06.2013 ல் இறந்தார். தாவா சொத்தில் என் அப்பாவும் அவருக்கு பிறகு என் சகோதரரும் விவசாயம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். என் அப்பாவும், தாத்தாவும், பெரியப்பாவும் குடும்ப சொத்துக்களை அளந்து பாக கறார் செய்து கொள்ளவில்லை என்றால் வாய்மொழியாக தான் பாகம் பிரித்து கொண்டார்கள். அளந்து முட்டுக்கல் போடவில்லை என்றால் சரிதான். அவர்கள் தாவா சொத்தை பாகம் பிரித்து கொண்ட தேதி, மாதம், வருடம் தெரியாது. யார் முன்னிலையில் பாகம் பிரித்து கொண்டார்கள் என்றும் தெரியாது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் எவ்வளவு விஸ்தீரணம் பாகம் ஒதுக்கப்பட்டது என்றும் எனக்கு தெரியாது. பஞ்சாயத்தார்கள் மூலம் பேசிதான் பாகம் பிரித்தார்கள். பஞ்சாயத்தில் கலந்து கொண்ட சித்தன், பெருமாள், பரமசிவம் ஆகியோர்கள் தற்போது உயிருடன் இல்லை. பஞ்சாயத்து முச்சலிக்கா எழுதி கொண்டார்களா என்று எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் எந்த பாக பிரிவினையும் என் தாத்தா வாரிசுகளுக்கிடையே நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ல் நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். என் பெரியப்பா மகள்கள் இருவரும் அதில் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். அதனால் வா.சா.ஆ.2 செல்லாது என்றால் சரியல்ல. என் அப்பா இறந்த பிறகு தான் தாவா சொத்திற்கு என் பெயர் பட்டாவில் சேர்க்கப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தில் எனக்கு உரிமை மற்றும் சுவாதீனம் இல்லை என்பதால் என் பெயர் பட்டாவில் சேர்க்கப்பட்டது தவறு என்றால் சரியல்ல. 18.06.2017 ல் 2 ம் பிரதிவாதி தாவா சொத்தில் கட்டிடம் கட்டியதாக நான் போலீஸ் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அவர் தாவா சொத்தில் கட்டிடம் கட்ட முயன்றதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் எப்போதும் சுவாதீனத்தில் இல்லை என்பதால் நான் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறு என்றால் சரியல்ல. அவசிய தரப்பினர்களை சேர்க்க தவறியதால் தாவா நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

Sd/-ராஜேஸ்வரி

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,

சார்பு நீதிபதி, சங்ககிரி.